# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தம்)

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் அவர்களால் 2025 நவெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2025 நவெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

[38 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 44.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 2 ஆம் பாகத்தைத் திருத்துகின்றது என்பதுடன் இப்பிரிவின் சட்டப்பயன், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட வரிவிடுமுறைக்கான ஆண்டுகளின் எண்ணிக்கை மற்றும் ஏதேனும் விலக்களிப்பு அல்லது சலுகையை எல்லைப்படுத்துவதுமாகும்;

***வாசகம் 3:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவினை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் இப்பிரிவின் சட்டப்பயன், எச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஏதேனும் வரிவிடுமுறை, விலக்களிப்பு அல்லது சலுகைக்கு உரித்துடையதாகின்றதோ அச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களின் இனங்காணல் நடவடிக்கைமுறையினை உருவாக்குவதுமாகும்;

***வாசகம் 4:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவினை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் 4, 4அ, 4ஆ, 4இ, 4ஈ, 4உ மற்றும் 4ஊ ஆகிய பிரிவுகளின் சட்டப்பயன், முறையே பின்வருவனவற்றை வழங்குவதுமாகும்:-

(அ) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிகழ்வுக்குப் பின்னரான கண்காணிப்புக்கு ஏற்புடையதான நடவடிக்கைமுறை;

(ஆ) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட உருவகமொன்றின் மீதான தடைவிதிப்புகளின் விதிப்புக்கான வெளிப்படையானதும் நியாயமானதுமான நடவடிக்கை முறையொன்றின் தாபனம்;

(இ) வரிவிபரத்திரட்டுகளின் கட்டாயக் கோப்பிடுதல், பிடித்துவைத்தற் கொடுப்பனவுகளின் வருமான வரிக்கு பொறுப்பாதல் மற்றும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட உருவகங்களின் ஊழியர்களின் தொழில் வருமானத்தில் வரிவிதித்தலும்;

(ஈ) வர்த்தகத் தொழிற்பாடுகளின் சான்றுப்படுத்தப்பட்ட தேதியில் வரிவிடுமுறையின் தொடங்குதலை குறித்துரைத்தலும் அக்காலப்பகுதியின் ஏதேனும் நீட்டிப்பை தடைசெய்தலும்;

(உ) எல்லாச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான வரிச் செலவினங்கள் மீதான வருடாந்த அறிக்கையொன்றினை வெளியிடுவதற்கு நிதி அமைச்சினைத் தேவைப்படுத்துவதன் மூலம் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துதல்;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட விலக்களிப்புகள், சலுகைகள் அல்லது வரி விடுமுறைகளின் தொடர்ச்சியான இயைபானதன்மை மற்றும் வினைத்திறனின் இடையிடையேயான பரிசீலனையொன்று; அத்துடன்

(எ) அதிகாரமளிக்கப்பட்டவாறான அல்லது தேவைப்படுத்தப்பட்டவாறான ஒழுங்கு விதிகளை ஆக்குவதற்கு அமைச்சருக்கு தத்துவமளித்தல்.

***வாசகம் 5:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் இப்பிரிவின் சட்டப்பயன், முதன்மைச் சட்டவாக்கத்தின் குறிப்பிட்ட புதிய வரைவிலக்கணச் சொல்லமைப்புக்களை உட்புகுத்துவதுமாகும்.

ச.வ. - ஓ 38/2025

**2008 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) 2011 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் காப்பு வாசகத்தில் "இருபத்தைந்து ஆண்டு காலப்பகுதியொன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாண்டு காலப்பகுதியொன்றை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தை அடையாளங் காணல்

**3.** (1) இலங்கை முதலீட்டுச் சபையானது, விதித்துரைக்கப்படக் கூடியவாறான கட்டளைக்கற்களுக்கமைய, ஏதேனும் உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தை ஒரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமாக அடையாளங்காணல் வேண்டும்.

(2) உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தை ஒரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமாக அடையாளங்காண்பதன்மேல், இலங்கை முதலீட்டுச் சபையானது அத்தகைய கருத்திட்ட உத்தேசத்தை நிகழ்வுக்கு முன்னரான செலவு நன்மைப்பகுப்பாய்வுக்காக நிதியமைச்சுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(3) நிதியமைச்சானது, இலங்கை முதலீட்டுச் சபையிடமிருந்தான தொழினுட்ப உள்ளீட்டுடன், கருத்திட்டத்தின் அத்தகைய நிகழ்வுக்கு முன்னரான செலவு நன்மைப்பகுப்பாய்வை நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன் (2) ஆம் உட்பிரிவின்கீழான அத்தகைய ஆற்றுப்படுத்துகைத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் இலங்கை முதலீட்டுச் சபைக்கு விதப்புரையொன்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(4) இலங்கை முதலீட்டுச் சபையானது, அத்தகையவொரு கருத்திட்டம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்டவாறு தகவுடைமைக் கட்டளைக்கற்களை எதிர் கொள்கின்றதென்று திருப்திபடுவதன்மேலும், (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விதப்புரையைக் கருத்திற்கொண்டும், விதித் துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான ஆண்டுகளுக்கான வரிவிடுமுறையையும் ஏதேனும் விலக் களிப்பையும் அல்லது சலுகையையும் அளித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் ஒரு கருத் திட்டத்தைச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளங் காண்பதன் மேல், இலங்கை முதலீட்டுச் சபையானது அத்தகைய முடிபை அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும்.

(6) அமைச்சர், அமைச்சரவையின் ஒருப் பாட்டுடன், பின்வருவனவற்றைக் குறித் துரைக்கின்ற கட்டளையொன்றை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்:-

(அ) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத் திட்டத்தின் பெயரும் தன்மையும்;

(ஆ) 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி அளிக்கப்பட்டவையும், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டவையுமான சட்டவாக்கங் களிலிருந்தான விலக்களிப்புகள் அக்கருத்திட்டம் தொடர்பில் எத்தேதியன்று நடைமுறைக்கு வரவேண்டுமோ அத்தேதி; அத்துடன்

(இ) தோதானவையென அவர் கருதுகின்ற வாறான வேறெவையேனும் அவசிய மான தகவல்கள்.

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய கட்டளை, தகவலுக்காகப் பாராளு மன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன:-

"செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நிகழ்வுக்குப் பின்னரான கண்காணிப்பு

**4.** (1) இலங்கை முதலீட்டுச் சபையானது, தோதானதென அது கருதுகின்றவாறாகக் காலத்துக்குக்காலம், ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில் நிகழ்வுக்குப் பின்னரான கண்காணிப்பை நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன் நிதியமைச்சுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியமைச்சானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அதன் அலுவலக முறையான வலைத்தளத்தின்மீது வெளியிடுவதன்மூலம் கருத்திட்டத்தின் விளைவுகளையும் கருத்திட்டத்தின் நிதித்

தாக்கங்களையும் பொதுமக்களுக்கு வெளி விடுதல் வேண்டும்.

(3) ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம், அங்கீகரிக்கப்பட்ட முக்கிய செயல் நிறைவேற்றச் சுட்டிகளுக்கு இணங்கி யொழுகத் தவறுமிடத்து, இலங்கை முதலீட்டுச் சபையானது இணங்கியொழுகாமை பற்றிய அறிவித்தலொன்றைச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட உருவகத்துக்கு வழங்குதல் வேண்டும்; இது பின்வருவன வற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) இணங்கியொழுகாமையின் தன்மை; அத்துடன்

(ஆ) திருத்த நடவடிக்கைக்காகக் குறித் துரைக்கப்பட்டவொரு காலப்பகுதி.

(4) ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் இலங்கை முதலீட்டுச் சபை யினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி யினுள் திருத்த நடவடிக்கையை எடுக்கத் தவறு மிடத்து, இலங்கை முதலீட்டுச் சபையானது, நிதியமைச்சின் கலந்தாலோசனையுடனும் இணங்கியொழுகாமையின் தன்மை மற்றும் பாரதூரமானதன்மையை கருத்திற்கொண்டும் பின்வரும் நடவடிக்கைகளுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ எடுக்கலாம்:-

(அ) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில் இச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட விலக் களிப்புகள், சலுகைகள் அல்லது வரிவிடுமுறை எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் மட்டுப்படுத்துதல், இடைநிறுத்துதல் அல்லது இல்லாதொழித்தல்; அல்லது

(ஆ) அது சம்பந்தமாக உறப்பட்ட இழப்பை அறவிடுவதற்கு நிருவாகத் தண்டங்களை விதித்தல் .

காரங்காட்டுவதற் கான அறிவித்தல்

**4அ**. (1) இலங்கை முதலீட்டுச் சபையானது, 4 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) வில் அல்லது (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கையை எடுக்குமுன்னர், நடவடிக்கைக்கான ஏதுக் களைக் குறித்துரைத்து, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட உருவகத்துக்கு எழுத்தில் அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று 4 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) வில் அல்லது (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட தடைவிதிப்புகள் ஏன் விதிக்கப்படலாகாதென்பதுபற்றி அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒருமாத காலப் பகுதியினுள் காரணங்காட்டும்படி செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட உருவகத் தைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) ஓர் இறுதி முடிபு ஆக்கப்படும் முன்னர், ஒன்றில் நேரடியாகவோ அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிமூலமாகவோ கேட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப் பொன்று செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட உருவகத்துக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(4) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத் திட்ட உருவகத்தினால் அல்லது அதன் பிரதி நிதியினால் செய்யப்பட்ட எவையேனும் பிரதிநிதித்துவங்களைக் கவனத்துட்

கொண்டதன்மேல் இலங்கை முதலீட்டுச் சபை, எழுத்தில் பதியப்படவேண்டிய காரணங் களுக்காக, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட விலக்களிப்புகள், சலுகைகள் அல்லது வரிவிடுமுறை எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் மட்டுப் படுத்தலாம், இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம் அல்லது அது சம்பந்தமாக உறப்பட்ட இழப்பை அறவிடு வதற்கு நிருவாகத் தண்டங்களை விதிக்கலாம்.

வரியைச் செலுத்து வதற்கான பொறுப்பு

**4ஆ**. இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்-

(அ) ஒவ்வொரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட உருவகமும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி வரி விபரத்திரட்டுக்களைக் கோப்பிடுதல் வேண்டும்;

(ஆ) ஒவ்வொரு செயல்நுணுக்க அபிவிருத் திக் கருத்திட்ட உருவகமும் பிடித்து வைத்தற் கொடுப்பனவுகள் தொடர் பில் வருமானவரி செலுத்துவதற்குப் பொறுப்பாதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத் திக் கருத்திட்ட உருவகத்திலிருந்தான வதிவுள்ள மற்றும் வதிவற்ற ஊழியரின் ஒவ்வொரு தொழில் வருமானமும் வருமானவரி செலுத்துவதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.".

வரிவிடுமுறைக் காலப்பகுதி தொடங்குதல்

**4இ**.(1) ஒரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு ஏற்புடையற்பாலதான வரி விடுமுறைக் காலப்பகுதியானது, இலங்கை

முதலீட்டுச் சபையினால் சான்றுப்படுத்தப் பட்டவாறு, அத்தகைய கருத்திட்டத்தின் வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங்கும் தேதியன்று தொடங்குதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஒரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அளிக்கப் பட்ட வரிவிடுமுறைக் காலப்பகுதியானது எச் சூழ்நிலைகளின்கீழும் நீடிக்கப்படுதலாகாது.

செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக் கான வரிச் செலவினங்கள் பற்றிய வருடாந்த அறிக்கை

**4ஈ.** நிதியமைச்சானது, ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும், இச்சட்டத்தின் கீழான எல்லாச் செயல்நுணுக்க அபிவிருத் திக் கருத்திட்டங்கள் தொடர்பான வரிச் செலவினங்கள் பற்றிய வருடாந்த அறிக்கை யொன்றை அதன் அலுவலக முறையான வலைத்தளத்தின்மீது வெளியிடுதல் வேண்டும்.

பரிசீலனை

**4உ.** நிதியமைச்சானது, இலங்கை முதலீட்டுச்சபையின் கலந்தாலோசனையுடன், இப்பிரிவு தொடங்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவுறுவதன்மேல், இச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட விலக் களிப்புகள், சலுகைகள் அல்லது வரி விடுமுறை யின் தொடர்ச்சியான இயைபானதன்மை மற்றும் வினைத்திறனைப் பரிசீலனை செய்யலாம்.

ஒழுங்குவிதிகள்

**4ஊ.**(1) எக்கருமங்களுக்காக இச்சட்டத் தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டு மென அல்லது விதித்துரைக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்கு விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளி யிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்கு விதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதகாலப் பகுதியினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளு மன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(4) அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதிபற்றிய அறிவிப்பொன்று வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது:-

"பொருள் கோடல்

**6.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"இலங்கை முதலீட்டுச் சபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக் கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் முதலீடு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்; அத்துடன்

"செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட உருவகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையானது எந்தத் தொழில்முயற்சியுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதோ மற்றும் இச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஒரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமாக அது அடையாளங் காணப்பட்டுள்ளதோ அந்தத் தொழில் முயற்சி என்று பொருளாகும்.".

ஐயத்தைத் தவிர்த்தல்

**6.** இத்திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் ஒரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்குச் சட்ட முறையாக அளிக்கப்பட்ட ஏதேனும் வரிவிடுமுறை, விலக்களிப்புகள் மற்றும் சலுகைகள் அல்லது வேறு நன்மை, அவற்றோடிணைந்த நியதிநிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கமைய, அவற்றின்கண் குறித்துரைக்கப்பட்ட காலஎல்லைக்குத் தொடர்ந்து செல்லுபடியாதல் வேண்டுமென ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.